**வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் - 2023/2024**

**-----------------------------------------------------------------------------------------**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் ("கம்பனி") 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்களையும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2024 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து கம்பனியின் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான

நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு

போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை ‘‘திட்டமிட்டு பேணுதல்’’ நிறுவகத்திற்கு அவசியமாக உள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமைகள்

| | உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 38 இன் 9 மற்றும் 21 ஆம் பிரிவுகளின் பிரகாரம் ஏதாவதொரு கற்பனைச் சொத்தொன்றின் மூலம் நிறுவனத்திற்கு எதிர்கால பொருளாதார நலன்கள் வரக்கூடியதாக இருந்தால் அல்லது உரிய சொத்தின் கிரயத்தை நம்பகத்தன்மையுடன் அளவிட முடியுமாக இருக்குமாயின் அந்தக் கற்பனைச் சொத்துக்களைக் கைப்பற்றுவதற்காக ஏற்படுகின்ற கிரயம் சொத்தொன்றாக இனங்காணப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் 2020 நவம்பர் 10 ஆந் திகதி கம்பனிக்கு கைப்பற்றிக் கொள்வதற்கு உடன் படிக்கை செய்யப்பட்ட கணனிமயப்படுத்தப்பட்ட கப்பல் முகாமைத்துவ முறையின் திட்டமிடப்பட்ட பராமரிப்பு முறைமை, பதவியணியினர் மொடியூல் மற்றும் HSEQ மொடியூல் இற்காக செலவிடப்பட்ட ரூபா 4.5 மில்லியன் நிதி நிலைமைக் கூற்றில் கற்பனைச் சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல் 2020/21 நிதி ஆண்டில் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதனால் கற்பனைச் சொத்துக்கள் ரூபா 4.5 மில்லினால் குறைத்துக் காண்பிக்கப் பட்டதுடன் அந்த ஆண்டின் செலவினம் ரூபா 4.5 மில்லியனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணனிமயப்படுத்தப்பட்ட கப்பல் முகாமைத்துவ முறைமை கணக்காய்வு செய்யப்பட்ட 2020/21 கணக்காண்டின் போது செலவினமாக இனங் காணப்பட்டுள்ளது. 2024/2025 ஆம் ஆண்டின் போது இது சொத்தாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியமம் 38 இன் பிரகாரம் கற்பனைச் சொத்துக்களை இனங்காண்பதற்கும், கணக்கீடு செய்வதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கம்பனிக்கு உரித்தான புதிய காணியைச் சுற்றி நிர்மாணிக்கப்பட்ட 2023 ஆகஸ்ட் 23 ஆந் திகதி வேலி பூர்த்தி செய்யப்பட்ட வேலை தொடர்பாக ஏற்பட்ட செலவினம் ரூபா 1.5 மில்லியன் கிரயம் நடைமுறை வேலையில் உள்ளடக்கப்பட்டிருந்த போதும் 2024 மார்ச் 31 ஆம் திகதியில் மூலதனமாகப்படாமையினால் மீளாண்டில் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. மேலும் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 55 ஆம் பிரிவின் பிரகாரம் சொத்தொன்றை | வேலி நிர்மாணிப்பதற்குரிய பெறுகை நடைமுறைகள், தொழில்நுட்ப அறிக்கை, கேள்விச் சபையின் பட்டியல் மற்றும் வேலியினைப் பரிசோதனைக்கு உட்படுத்திய குழுவின் அறிக்கைகளில் தற்காலிக நிர்மாணமாகக் காண்பிக் கப்பட்டதுடன் தகரத்தைப் பயன்படுத்தி நிர்மாணிக் கப்பட்ட தற்காலிக வேலி | நடைமுறை வேலையின் கணக்கீடு செய்யப்பட்டுள்ள சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் பிரகாரம் மூலதன மாக்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்வதற்கு எடுக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பத்தில் இருந்து அந்த சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்ய வேண்டியிருந்த போதிலும் ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | யாகும். LKAS 16 இன் 50 மற்றும் 57 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பெறுமானத் தேய்வு செய்யும் போது பயன்தரு ஆயுட்காலம் நம்பகரீதியில் அளவிடல் பிரயோக ரீதியில் இல்லாத பணியாகும். அதனால் இந்தத் தற்காலிக வேலி சொத்தொன்றாக இனங்காணப்படவில்லை. | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியொன்று அதன் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களை சொத்தொன்றாக இனங்கண்ட பின்னர் அந்த பெறுமதியை அளவீடு செய்யும் போது கிரய முறைமை அல்லது மீள் மதிப்பீட்டு முறைமை பயன்படுத்தடுத்த வேண்டியிருந்த போதிலும் அது கணக்கீட்டு கொள்கைகளில் வெளிப்படுத்தப்படல் வேண்டும். எனினும் கம்பனியால் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் கிரய முறையில் அளவிடப்படுகின்றமை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப் பட்டிருந்த போதும் கம்பனியின் ரூபா 225.7 மில்லியன் பெறுமதியான காணி கணக்கீடு செய்யும் போது சந்தைப் பெறுமதி அடிப்படையாக கொள்ளப்பட்டிருந்தது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 29 ஆம் பிரிவின் பிரகாரம் கிரயம் அல்லது மீள் மதிப்பீட்டு முறை பயன்படுத்துவதற்கு கம்பனிக்கு முடியுமாக இருந்ததுடன் அதன் பிரகாரம் கம்பனியின் கணக்கீட்டுக் கொள்கைக் கூற்றில் 3.4 இல் காணி மீள்மதிப்பீட்டு முறையில் பேணிச்செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 32 ஆம் பிரிவின் பிரகாரம் இந்தக் காணி பட்டய மதிப்பீட்டாளரை அழைத்து மீள்மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் எந்தவொரு ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரண விடயங்கள் முதல் தடவையாக இனங் காணப்பட்ட பின்னர் மீள் மதிப்பீட்டு பெறுமதியில் அளவீடு செய்வதாயின் கடந்த கால அளவிடல்களின் கீழ் (Subsequent Measurement) சரியாக வெளிப்படுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கையின் நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 9 இன் 4.1.2 (A) பிரிவின் பிரகாரம் நிறுவனம் நிதிச் சொத்துக்களை வகைப்படுத்தும் போது அதன் நியாயமான பெறுமதி (Fair value through other comprehensive income) அடிப்படையாகக் கொள்ள வேண்டியிருந்ததுடன் இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 09 (SLFRS 9) இன் 4.1.4 பிரிவின் பிரகாரம் கம் பனியால் அதன் நிதி சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்யும் போது (Quoted investment) நியாயமான பெறுமதி யை அடிப்படையாக் கொண்டு பெறுமதியிட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமையின் காரணமாக நிதிச் சொத்துக்களின் பெறுமதி ரூபா 9.9 மில்லியனால் அதிகரித்துக் கணக்கீடு | எங்களால் நிதிச் சொத்துக் களின் பெறுமதி மதிப்பீடு செய்யும் போது (Quoted Investment) Mercantile Shipping Company PLC வருடாந்த அறிக்கை (2023/24) பகிரங்கப்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதனால் அந்த சந்தர்ப்பத் தில் காணப்பட்ட சந்தைப் பெறுமதியை அடிப்படை யாகக் கொண்டு Mercantile Shipping Company இன் நிதிச் சொத்துக்களின் பெறுமதி கணிப்பிடப்பட்டதுடன் அதன் வருடாந்த அறிக்கை | இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் நிதிச் சொத்துக்களின் பெறுமதியிடல் சரியாக மேற்கொள்வதற்கும், கணக்கீடு செய்வதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருந்தது. | பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னர் எங்களால் அதனைச் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பனியின் கடன்பட்டோர் ஒருவரின் உறுதிப்படுத்தப்பட்ட கடன் மீதி மற்றும் கம்பனியின் கடன்பட்டோர் மீதிக்கிடையே ரூபா 8.1 மில்லியன் வேறுபாடு காணப்பட்டது. | M/S Mur Shipping Ltd நிறுவனம் 31.03.2024 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ஐ.அ டொலர் (USD) 58,505.99 ஆக உறுதிப்படுத் தப்பட்டிருந்த போதும் ஏடுகளில் குறிப்பிடப்பட்ட USD 31,609.18 கிடைக்க வேண்டிய மீதி கப்பல் வாடகைக்கு வழங்கும் பிரிவில் அறிவித்ததன் அடிப்படையில் சமர்ப்பிக்கப்பட்ட பட்டியல்களில் குறிப்பிடப்பட்டு இருந்தமையை தெளிவுபடுத்துதல் வேண்டும். | நிறுவனத்தின் அந்தந்த பிரிவுகளுக்கிடையே முறையான தொடர் பொன்றைப் பேணிச் செல்வதற்கும் கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல்களுடன் இணக்கம் செய்த பின்னர் தேவையான சரி செய்தல்களை மேற்கொள்வதற்கும் முகாமைத்துவத்தால் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | வியாபர பெற வேண்டியவைகளின் இழப்பீட்டு சீராக்கத்தின் போது (Impairment) தனித்தனியாக நிறுவனங்களுக்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 161.2 மில்லியன் மற்றும் தொகுதியாக ஏற்பாடு செய்யப்பட்ட ரூபா 1,096.6 மில்லியன் ஆன பெறுமதிகளுக்காக தர்க்கரீதியான அடிப்படையில் அல்லது பெறப்பட்ட முறையான அங்கீகாரம் ஒன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | நிறுவனத்திற்கு கிடைக்க வேண்டியவைகள் (Debits) இற்காக ஏற்பாடுகள் (Impairment) 2013/14 ஆம் ஆண்டில் இருந்து மேற் கொள்ளப்படுவதுடன் அது அந்த ஆண்டில் இருந்து கணக்காய்வு செய்யப்பட்ட கணக்காய்வு கம்பனிகளின் ஆலோசனையின் அடிப்படையில் மற்றும் உயர் முகாமைத்துவத்தின் ஆலோ சனையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. | தர்க்கரீதியான அடிப்படையில் மற்றும் முறையான அங்கீகாரத்தின் கீழ் இழப்பீட்டு சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.4 கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இலாபம் ரூபா 763.2 மில்லியன் ஆக இருந்ததுடன் திரண்ட நட்டம் ரூபா 9,979.2 | அதி விஷேட பொதுக் கூட்டத்தின் போது உத்தேசிக்கப்பட்ட செயற்திட்டத்தின் நிலைமை பின்வருமாறு | கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக நிச்சயமற்ற நிலை மையினை மாற்றியமைப் பதற்காக தேவையான |

மில்லியன் ஆகும். மேலும் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனி யின் தேறிய சொத்துக்களின் பெறுமதி ரூபா 8,358.2 மில்லியன் மறைப் பெறுமதி ஆகும். மீளாய்வாண்டின் இலாபமொன்றை காண்பித்ததன் காரணமாக முன்னைய ஆண்டின் நட்டம் 141.10 சதவீதத்தில் குறைவடைந்திருந்ததுடன் கம்பனி யின் தேறிய சொத்துக்களின் மறைப் மீதி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 9.25 சதவீதத்தல் வீழ்ச்சியடைந்திருந்த போதும் அதன் பிரகாரம் கம்பனியின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பாக காணப்படுகின்ற நிச்சியமற்ற நிலைமை தொடர்ந்தும் அவ்வாறே காணப்பட் டது. மீளாய்வாண்டிலும், கடந்த ஆண்டுககளி லும் திரண்ட நட்டங்களுக்கு பிரதான காரண மாக ஐக்கிய அமெரிக்க டொலர் (ஐ.அ.டொலர்) இலங்கை ரூபாயின் பெறுமதியில் மாற்றப்பட்ட மையால் எழுந்திருந்த நாணயமாற்று நட்டமாகும். இந்த நிலைமையை மாற்றியமைப்பதற்காக 2023 மார்ச் 24 ஆம் திகதி நடைபெற்ற விஷேட பொதுச் சபைக் கூட்டத்தின் போது (EGM) கம்பனியின் நடவடிக்கைகள் முன்மொழி யப்பட்டிருந்த போதிலும் அந்த அன்னியச் செலாவணி நட்டத்தைக் குறைத்துக் கொள்ளும் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

i. மிதக்கும் கடல் எரிபொருள் களஞ்சியத்தை அமுல்படுத்துதல் - ஆரம்ப மூலதனம் இல்லாமையின் காரணமாக தாமதமடைந்தது.

ii. இலங்கை அரசாங்கத்தில் பதிவு செய்தலை மேம்படுத்துதல் - வியாபார கடல்சார் செயலகத்தில் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

iii. பிரயாணிகள் மற்றும் நுரைச்சோலை பொருப் போக்குவரத்து நடவடிக்கை களுக்காக படகொன்றை நிர்மாணித்தல் - ஆரம்ப ஆய்வு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்ட போதும் மோசமான காலநிலையில் படகை ஈடுபடுத்துவதற்காக பொருத்தமான வியாபார நடவடிக்கைகள் குறைந்தமையினால் செயற்திட்டம் கைவிடப்பட்டது.

iv. காங்கேசன் துறையில் இருந்து பெயர்குறிப்பிட்ட இந்தியாவின் துறைமுகம்/ துறைமுகத்திற்கிடையே பிரயாணிகள் மற்றும் கப்பல் பொருள் போக்குவரத்து கப்பலொன்றை செயற்படுத்துதல் - விண்ணப்பதாரர் மற்றும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

v. இலங்கை மற்றும் பங்களா தேசத்திற்கிடையே கொள்கலன் போக்குவரத்து சேவையொன்றை அமுல்படுத்துதல் - செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முதல் ஏற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகள் இரண்டு நாடுகளினாலும் முன்மொழியப்பட்டிருந்த போதிலும் பங்களாதேசம் தரப்பில் இணக்கப்பாட்டிற்கு வந்திருக்கவில்லை.

நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத் துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### 1.6.1 பெற வேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனிக்கு அறவிட வேண்டிய வியாபாரக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 1,744.6 மில்லியன் ஆக இருந்ததுடன் அதில் 06 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தி லிருந்து அறவிடப்படாத வியாபாரக் கடன்பட்டோர் பெறுமதி ரூபா 1,104.9 மில்லியன் தொகையினை அறவிடுவதற்கு எந்தவொரு நடவடிக் கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கடனை அறவிடும் குழுவின் நடவடிக்கைகளை உள்ளடக்கிய அறிக்கை கணக்காய்விற் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 10 வருடங்களை விஞ்சிய கடன் மீதி ‘‘அறவிட முடியாக்கடன்’’ ஆக நீக்குவதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடன்பட்டோரிடமிருந்து பணத்தை சேகரித்துக் கொள்வதற்காக முறையான உள்ளகக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றைப் பின்பற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், மிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16.2 ஆம் பிரிவு மற்றும் 2021 நவம்பர் 16 ஆம் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கை யின் செயற்பாட்டுக் கைநூலின் 6.6 ஆம் பிரிவு | கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கம் பனியால் நிதிக் கூற்றுக்களுடன் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் கம்பனியின் நிதிக் கூற்றுக் கள் 63 நாட்கள் தாமதத்துடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தில் கூழியர் வெற்றிடப் பிரச்சினையால் வரைவு வருடாந்த அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய காலத்தை விஞ்சி யிருந்தது. | தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து உரிய காலத்தில் கம்பனியால் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் 82 (இ) ii உப பிரிவின் படி நிறுவனம் ஒன்றினால் அதன் வருமான வரி, மதிப்பீட்டு ஆண்டின் | 2024 செப்டெம்பர் 26 ஆம் திகதி வரையில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு மேலும் | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் ஆண்டிற்குரிய வருமான வரி, மதிப்பீடு ஆண்டு |

| | | |
|---|---|---|
| இறுதியில் இருந்து ஆறு மாதங்கள் முடிவடைகின்ற திகதியின் போது செலுத்த வேண்டியிருந்த போதிலும் கம்பனியால் 2023/24 ஆண்டிற்குரிய வருமான வரி ரூபா 380.6 மில்லியன் குறித்துரைத்த காலத்தில் செலுத்தப்படாமையின் காரணமாக தண்டப்பணம் மற்றும் வட்டியாக முறையே ரூபா 38 மில்லியன் மற்றும் ரூபா 17 மில்லியன் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | செலுத்துவதற்கு உள்ள வரித் தொகை ரூபா 380,633,541 ஆகும். | முடிவடைந்து குறித்துரைத்த காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 1,174,795,701 இலாபமாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 433,605,111 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 1,608,400,812 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் நேர் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 786,289,596 இனால் அதாவது 24 சதவீதத்தாலும், நிதிச் செலவினம் ரூபா 2,412,224,054 இனால் அதாவது 55 சதவீதத்தினாலும் குறைவடைந்தமை மற்றும் ஏனைய வருமானம் ரூபா 1,244,494,425 இனால் அதாவது 149 சதவீதத்தால் அதிகரித்தமை இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2005 மே 06 ஆம் திகதிய இலக்கம் 415 என்ற அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2016 பெப்ரவரி 18 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கைக் கடித இலக்கம் 03 இல் காண்பிக்கப்பட்டுள்ள ஏற்பாடு களின் பிரகாரம் கப்பலின் மூலம் பொருட்கள் இறக்குமதி செய்யப்படுகின்ற சகல அரசாங்க நிறுவனங்களினாலும் கேள்வி கோரும் போது போக்குவரத்து தவிர பொருட்களின் கிரயம் மற்றும் போக்குவரத்தாக தனித்தனியாக கேள்வி அழைப்பு விடுக்க வேண்டியிருந்ததுடன் பிரயாணத்தின் போது போக்குவரத்திற்காக செலுத்த வேண்டியதன் அடிப்படையில் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் ஊடாக பொருட்கள் இறக்குமதி செய்தல் இலாபகரமானதா என கவனத்திற்கொள்ளல் வேண்டும். அதன் பிரகாரம் இலங்கை கப்பல் | உலகளாவிய பொருளாதார மந்தநிலை காணப்பட்டமை, கொவிட் தொற்றுநோய் உட்பட நாட்டிலும் உலகத்திலும் ஏற்பட்ட பாதகமான நிலைமையின் காரணமாக 2020/21, 2021/22 மற்றும் 2022/23 நிதி ஆண்டுகளின் போது கூட்டுத்தாபனம் ஊடாக போக்குவரத்துச் செய்யப்பட்ட சம்பவங்களின் எண்ணிக்கை ரீதியில் குறைவடைந்திருந்தது. மேலும் அரச நிறுவனங்களில் கவனத்தில் கொள்ளக்கூடிய அளவில் அறிவித்தல்கள் மேற்கொண்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு கப்பல் கூட்டுத்தாபனம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருந்ததுடன் அரச மற்றும் நிதிச் சுற்றறிக்கை 415 இலக்கம் MPS/P&D/02/04/08 Vol ii மற்றும் | அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து தமது வியாபார நடவடிக்கை களை விரிவுபடுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

கூட்டுத்தாபனம் ஊடாக பொருட்கள் இறக்குமதி செய்தல் மிகவும் இலாபகரமானதாயின் பிரயாணங் களின் போது செலுத்த வேண்டிய அடிப்படையில் கப்பல் பத்திரத்தின் கீழ் இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் கப்பல் அல்லது கப்பல் கூட்டுத்தாபனத்தால் பெயர் குறிப்பிடப்படுகின்ற கப்பலில் ஏற்றுதல் வேண்டும். நாணயக் கடிதத்தின் பிரிபில் உள்ளடக்குதல் வேண்டும். அதன் பிரகாரம் முன்னைய அரசாங்கத்திற்கு உரித்தாக இருந்த கம்பனியாக அரச துறையின் இறக்குமதி பொருட்கள் போக்குவரத்துக்களில் கம்பனியின் இலாபத் தன்மையை அதிகரித்துக்கொள்ளும் இயலுமை காணப்பட்ட போதும் 2019 ஏப்ரல் 01 முதல் 2024 மார்ச் 31 வரை 05 வருட காலத்தில் வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம் ஊடாக பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட அரச நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் பல சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை முறையே 2019/20 ஆண்டின் போது 28 மற்றும் 2357 உம், 2020/21 ஆம் ஆண்டின் போது 22 மற்றும் 1925 உம், 2021/22 ஆண்டின் போது 23 மற்றும் 1300 உம், 2022/23 ஆம் ஆண்டின் போது 27 மற்றும் 821 உம், 2023/24 ஆம் ஆண்டின் போது 23 மற்றும் 1008 உம் ஆக ஒப்பீட்டு ரீதியில் குறைந்து காணப்பட்டது.

2022 நவம்பர் மாதம் 29 ஆம் திகதிய துறைமுகங்கள், கப்பல் துறை மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு செயலாளரின் கடிதத்தின் மூலம் அமைச்சு, திணைக்களம் மற்றும் நியதிச் சட்ட சபைகளுக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2023/24 ஆம் ஆண்டின் போது அரசதுறையில் பொருட்கள் இறக்குமதி / ஏற்றுமதி முழுமையாக மொத்த கொள்கலன்களைக் கவனத்திற்கொள்ளும் போது 995 அலகுகள் வரை, கொள்கலன் சுமை (Less than Container Load) 10,820.19 அலகுகள் வரை இறக்குமதி / ஏற்றுமதி செய்யப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை 1,008 வரையும் அதிகரித்திருந்தது. மேலும் 2024 ஏப்ரல் 01 ஆம் திகதி முதல் திசம்பர் 31 ஆம் திகதி வரை அரசதுறையில் பொருட்கள் இறக்குமதி / ஏற்றுமதி மற்றும் தொடர்பான பௌதீக செயலாற்றல் அண்ணளவாக (Physical Performance) அதன் அலகுகள் 750 மற்றும் கொள்கலன் சுமை (Less than Container Load) அலகுகள் 1,999,842 ஆக இருந் ததுடன் பொருட்கள் இறக்குமதி / ஏற்றுமதி செய்யப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை 714 ஆக இருந்தது.

(ஆ) 2005 இன் மே 06 ஆந் திகதிய இலக்கம் 415 என்ற அரச நிதிச் சுற்றறிக்கையின் ஏற்பா டுகளின் பிரகாரம் கம்பனியால் கம்பனி யின் போக்குவரத்து விலை வழங்குநர்களின் விலையினை விட அதகரிக்கின்ற சந்தர்ப்பங்களின் போது கைவிடும் அறிவித்தல் விநியோகிக்க வேண்டியிருந் ததுடன் கப்பலில் ஏற்றப்பட்ட பின்னர் கைவிடல் அறிவித் தலை கோரியிருந்தமை, அவசரக் கொள்வனவுகள், CIF விலையின் அடிப்படையில் பெறுகைகளைக் கையளித்தமை மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையில்

கூட்டுத்தாபனத்தால் விநியோகிக்கப்படுகின்ற மொத்தக் கைவிடல்கள் அறிவித்தல்கள் எண்ணிக்கை அதிகரித்த அளவொன்று கப்பலில் ஏற்றப்பட்ட பின்னர் கைவிடல் அறிவித் தல் கோரப்பட்டிருந்த என்ற தொகுதியின் கீழ் விநியோகிக்கப் படுகின்றது. பொருள் இறக்குமதி நடவடிக்கைகளின் போது வழங்குநர்களின் விருப்பத்தின் பிரகாரம் போக்குவரத்து மேற்கொள்ளும் போது, அந்த பொருட்களுக்காக தேவையான ஆவணங்கள், நாணாயக் கடிதம் விநியோகித்து வங்கியில் இருந்து

முகாமைத்துவத்தால் அரச நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| | கம்பனியால் 2019/20 ஆம் ஆண்டில் 319 உம், 2020/21 ஆம் ஆண்டின் போது 298 உம், 2021/22 ஆம் ஆண்டின் போது 185 உம், 2022/23 ஆம் ஆண்டின் போது 118 உம், 2023/24 ஆம் ஆண்டின் போது 81 உம் ஆக சுற்றறிக்கையின் நியதிகளுக்குப் புறம்பாக கைவிடல் அறிவித்தல் விநியோகிக்கப் பட்டிருந்தது. | குறித்துரைத்த பிரகாரம் பெற்றுக்கொள்வதால் தாமதக் கட்டணம் செலுத்தாமல் விடுவிக்கும் நடவடிக்கைகளை உள்ளடக்கி பல்வேறு காரணங்களினால் கைவிடல் அறிவித்தல் விநியோகிக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. 2023/24 நிதியாண்டின் ஒட்டுமொத்த கைவிடல் அறிவித்தல்கள் விநியோகிக்கப்பட்ட எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 185 முதல் 134 வரை குறைத்துக்கொள்ள முடியுமாக இருந்ததுடன் அது 27 சதவீதமான வீழ்ச்சியடைந்திருந்தது. | |
| (இ) | போட்டியாளர் கப்பல் கட்டண முறையின் அடிப்படையில் அரச இறக்குமதிகளை அதிகரிக்கும் சதவீதம் கம்பனிக்கு நிறுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததன் மூலம் இலாபகர மாக அபிவிருத்தி செய்யும் இயலுமை காணப்பட்ட போதிலும் கம்பனியின் போக்கு வரத்து கட்டணம், இறக்குமதி தொடர்பான வழங்குநரின் கப்பல் கட்டணங்களை விட அதிகரித்ததன் காரணமாக 2019/2020 முதல் 2023/24 வரை 05 வருடங்களில் முறையே கைவிடல் அறிவித்தல் 174, 163, 150, 67 மற்றும் 53 விநியோகிக் கப்பட்டிருந்தது. | கப்பலில் ஏற்றப்பட்ட பின்னர், இறக்குமதி பொருளுக்கு உரிய வர்களின் போக்குவரத்து கட்டணம் (Freight Rates) சமமாக்க முடியாதிருந்தமை, அதாவது அவர்களின் கேள்வி ஆவணங்களில் சரியான நிலைமையில் இல்லாத பொருட்கள் போக்குவரத்து இல்லாத போதும் போக்குவரத்து பொருள் போக்குவரத்து கட்டணம் (Unrealistic Freight Rates) சமர்ப்பித்தமை, அவசர கொள்வனவுகள், விஷேட கடன் நடைமுறையின் கீழ் முன் நிபந்தனைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்ற கொள்வனவுகள், CIF பெறுமதி மாத்திரம் குறிப்பிட்டு பெறுகை நடைமுறைகளுக்கு பங்கு பற்றிய வழங்குநர்களுக்கு கேள்வி கையளித்தமை போன்ற சந்தர்ப்பங்களின் போது அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் சரியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய முறையைக் குறிப்பிட்டு எதிர்வரும் கொள்வனவுகளுக்காக மிகவும் சிறந்த நடவடிக்கைகள் அரச நிறுவனங்களின் கவனத்திற்கு அனுப்புவதற்கு முயற்சி எடுக்கப்படுகின்றது. | கப்பல் துறைகளில் காணப்படுகின்ற அதிக போட்டியாளர் நிலைமையின் கீழ் பொருள் போக்குவரத்து கம்பனிக்கு வழங்குதலை முறைமைப்படுத்தி விலை தீர்மானிக்கும் முறைமையொன்றை பின்பற்றுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | கம்பனியின் 1993-2015 இற்கிடையிலான கால எல்லையின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9.8 மில்லியன் பெறுமதியான நிலையான சொத்தில் 328 விடயங்கள் தொலைந்துபோய் இருந்ததுடன் அது தொடர்பாக 2023/24 பொருள் மெய்மை ஆய்வு சபை அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. மேலும் அந்த விடயங்கள் 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையில் முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டிருந்ததுடன் முகாமைத்துவத்தின் நிலையான சொத்துக்களை கால ரீதியில் மீளாய்வு செய்து தொலைந்து போயிருந்த அல்லது அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த பொருட்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளுக்காக தயாரிக்கப்பட்ட அறிக்கை யொன்று வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதன் மூலம் பெறப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் இது தொடர்பாக எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக விசாரணை செய்து பொது முயற்சிகள் திணைக்களத்திற்கும் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | முகாமைத்துவத்தால் நிலையான சொத்துக்கள் கால ரீதியில் மீளாய்வு செய்து தொலைந்து போயிருந்த அல்லது அகற்றப்பட்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 3.2 பெறுகைகள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 நவம்பர் 10 ஆம் திகதி கம்பனியால் தனியார் கம்பனியொன்றுடன் 06 வருட கால எல்லைக்காக கம்பனியின் கப்பல்களுக்காக கணனிமயப்படுத்தப்பட்ட அடிப்படையில் கப்பல் முகாமைத்துவ முறைமையொன்றை அமுல்படுத்துவதற்கு ஐ.அ.டொலர் 102,800 உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. முதலாவது ஆண்டில் 03 கட்டங்களில் இந்த முறைமையை அமுல்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டதுடன் அதன் முற்பணத் தொகைக்காக ரூபா 2.9 மில்லியன் (ஐ.அ.டொலர் 15,400) மற்றும் முறைமை திட்டமிடல் ஏற்றுக்கொள்வதற்காக ரூபா 1.6 மில்லியன் (ஐ.அ.டொலர் 7,700) ஆக ரூபா 4.5 மில்லியன் செலவிட்டு 02 கப்பல்களுக்காக முறைமை ஸ்தாபித்து திட்டமிடப்பட்ட பராமரிப்பு முறைமை, பதவியணியினர் மொடியூல் மற்றும் HSEQ மொடியூல் என்ற முறைமைகள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் 03 வருடங்களும் | தனியார் கம்பனிக்கு செலுத்த வேண்டி ஏற்பட்ட குறித்துரைத்த ஐ.அ.டொலர் 15,400 செலுத்துவதற்காக அந்தக் கம்பனியால் செயலாற்றல் காப்புறுதி நீடிக்க வேண்டியிருந்த போதிலும் உரிய கம்பனி அதனை மேற் கொள்ளாதிருந்தமையால் அந்தத் தொகையைச் செலுத்துதல் பிரச்சினைக்குரிய நிலைமையாக ஏற்பட்டிருந்தது. பெறுகை முடியுள் தற்போது வடிவமைக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் காணப்படுவதுடன் 20 சதவீதக் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்படும் வரை அந்த மொடியூல் வடிவமைத்தல் தாமதமடைந்திருந்தது. தொழில்நுட்ப பிரிவில் பதவியணியினருக்கு மேலதிகமாக கப்பல் பதவி யணியினருக்காக பயிற்சி வழங்கப்பட்டதுடன் PMS (Planned Maintenance System) இற்காக தரவுகள், Crewing Module இற்கான தரவுகள் மற்றும் HSEQ Module இற்கான தரவுகள் குறித்துரைத்த பிரகாரம் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்த கணனியை அடிப்படையாகக் கொண்ட கப்பல் முகாமைத்துவம் முறைமை (CBSMS) தற்போது பிரயோக ரீதியில் பயன்படுத்தப்படுவதுடன் செலுத்தப்பட்டுள்ள தொகை | கம்பனியின் எதிர்கால செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக இந்த கணனிமயப்படுத்தப்பட்ட முறைமையை செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்காக முகாமைத்துவத்தால் தேவையான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 08 மாதங்களும் கடந்திருந்த போதிலும் கணனி முறைமை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் உரியவாறு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயனற்ற செலவினமாக இல்லாதிருந்த தையும் குறிப்பிடுகின் றோம். | |

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு கம்பனியின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 133 ஆக இருந்த துடன் பதிற்கடமைப் பதவி 01 உடன் உள்ளபடியான பதவியணியினர் 94 ஆகும். அதன் பிரகாரம் சிரேஷ்ட நிலையில் 08 பதவிகளும், மூன்றாம் நிலையில் 04 பதவிகளும், இரண்டாம் நிலையில் 25 பதவிகளும், ஆரம்ப நிலையில் 04 பதவிகளும் ஆக ஒட்டுமொத்த வெற்றிடங்களின் எண்ணிக்கை 41 ஆகக் காணப்பட்டதுடன் அது ஒட்டுமொத்த அங்கீகரிக் கப்பட்ட பதவியணியில் 30 சதவீதத்தைக் கொண்டிருந்தது. | 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு உள்ளபடியான பதவியணியினர் 94 ஆக இருந்த துடன் இதுவரையில் அந்த எண்ணிக்கை 109 வரை அதிகரித்திருந்தது. | முறையான அங்கீகா ரத்தைப் பெற்று பதவியணியினரைச் சேர்ப்பதற்கும், காணப்படுகின்ற பதவியணியினரை உச்ச அளவில் சேவையில் ஈடுபடுத்துவ தற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 நவம்பர் 16 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 வழிகாட்டியின் 2.3 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியால் உபாய வழித்திட்டத்துடன் கூட்டிணைந்த திட்டம் தயாரித்து அடுத்துவரும் ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் பொது திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. மேலும் 2018-2023 முடிவடையும் ஐந்து வருடக் கூட்டிணைந்த திட்டம் வருடத்திற்கு வருடம் நாளதுவரையாக்கி கூட்டிணைந்த திட்டத்தின் நோக்கங்கள் நிறைவேற்றுவது தொடர்பில் கவனம் செலுத்தி அல்லது வியாபார சூழலில் மாற்றங்களுக்கு இணங்க ஒவ்வொரு ஆண்டும் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பணிப்பாளர் சபையினால் காலத்திற்கு காலம் செயல் நடவடிக்கைத் திட்டத்தை செயற்படுத்துவதற்கு ஆக்கபூர்வமாக மதிப்பீடு செய்து உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் தேவையாயின் | வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பல் கூட்டுத்தாபனத்தின் உபாய வழித்திட்டத்துடன் கூட்டிணைந்த திட்டம் உரிய தரப்பினருக்கும், அர சாங்கத்தின் கணக்காய்வுப் பிரிவிற்கும் தற்போது வழங்கப்பட்டுள்ளது. | பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் உபாய வழித்திட்டத்துடன் கூட்டிணைந்த திட்டம் தயாரித்து பொதுத் திறைசேரிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன் வருடாந்தம் நாளதுவ ரையாக்குவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சரிசெய்யும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை.

## 4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

| அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நிறுவனத்திற்கு உரித்தான கப்பல்களில் பட்டய வாடகை வருமானம், Agency & Address Commission வருமானம், கொள்கலன் போக்குவரத்து வருமானம் மற்றும் சுங்க பொருள் விடுவித்தல் மற்றும் விநியோகித்தல் வருமானம் முறையே ரூபா 4,312 மில்லியன், ரூபா 692 மில்லியன், ரூபா 608 மில்லியன் மற்றும் ரூபா 35 மில்லியன் எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் அந்த வருமானம் முறையே ரூபா 2,476 மில்லியன், ரூபா 548 மில்லியன், ரூபா 568 மில்லியன் மற்றும் ரூபா 79 மில்லியன் ஆக இருந்தது. அதன் பிரகாரம் எதிர்பார்க்கப்பட்ட வருமானம் மற்றும் உள்ளபடியான வருமானங்களுக் கிடையே சதவீத ரீதியில் வேறுபாடு முறையே 43 சதவீதம், 21 சதவீதம், 7 சதவீதம் குறைவொன்றும் மற்றும் 125.71 சதவீத அதிகரிப்பும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் முகாமைத்து வத்தால் வருமான மதிப்பீடு பொருத்தமான ரீதியில் மேற்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023/2024 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கடலில் பட்டைய வாடகை வருமானம் எதிர்பார்க்காத வகையில் குறைவடைந்திருந்தமை பொருளாதார தாக்கங்களின் காரணமாக வாடகை வருமானம், 2023/2024 நிலக்கரி போக்குவரத்து ஆண்டில் கம்பனிக்கு கிடைக் காமையின் காரணமாக Agency & Address Commission வருமானமும், அரசினால் அமுல்படுத்தப்பட்ட நிதிக் கொள்கையினால் அரசாங்கத்தினதும் தனியார் இறக்குமதியாளர்களும் விரைவாக குறைவடைந் திருந்த மையினால் கொள்கலன் போக்கு வரத்து வருமானமும் எதிர்பார்த்த மட்டத்தினை விட குறைந்தி ருந்ததுடன் 2023/2024 ஆம் ஆண்டின் புதிய வியாபார சந்தர்ப்பங்களை கண்டறியும் போது ஆக்கபூர்வமான உபாய வழிகளை ஈடுபடுத்தி இருந்ததன் காரணமாக பொருட்களை விடுதலை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் வருமானம் எதிர்க்கப்பட்ட மட்டத்தைவிட அதிகரித்திருந்தது. | நிறுவனத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தை முறையாக தயாரிப்பதற்கும் செயல் முன்னற்றங்களை பின் தொடர் நடவடிக்கை பின் ஆய்வு செய்வதற்கும் தேவையான சரியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு முகாமைத் துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |